

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

செப்டம்பர் 2024

மரம் 24 கனி 10

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக** கொலோசெயர் 3:16

MONTHLY
THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜூனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 57
தலைப்பு : மாயக்காரன் - Hyocrites
வேத வாசிப்பு : மத்தேயு 6:5

1. மாயக்காரன் நம்பிக்கை அழிந்துபோம் - யோபு 8:3
2. மாயக்காரனோ அவர் சந்நிதியில் - யோபு 1316
3. மாயக்காரராகிய வேதபாரகரே - மத்தேயு 23:13-17


மாத இதழுக்கான
சந்தா செலுத்த மூன்று வழிகள்

**G-Pay & PhonePe - 9443558041**



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu

**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**



Contact Us: 6379350509

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

**Our TV Program: Six Days of the Week**

*Every Monday, Tuesday, Wednesday, Thursday, Friday & Saturday 6.00 P.M on Joy TV &*

***24 Hours Worldwide Twoc TV Channel***

YouTube : the word of christ






**THE WORD OF CHRIST**
**Monthly Magazine**
Editor
B.ARJUNAN

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 24 செப்டம்பர் -2024 கனி - 10


ஆசிரியருரை

## நற்சீர் பொருந்துங்கள்
## Become Complete



உலகத்தில் உள்ள எல்லோருமே நல்ல சீரும் சிறப்புடன் வாழவேண்டுமென விரும்புவார்கள். எவரும் குறைவான வாழ்க்கையை விரும்புவதில்லை. ஒருவர் உலக ஆசீர்வாதங்களைப் பெற்றவுடன் சீரும் சிறப்புமாக வாழ்க்கின்றார் என்று அர்த்தமாகிவிடாது. அவர் ஆவிக்குரிய விஷயத்தில் எப்படி வாழ்கிறார் என்பது மிகவும் முக்கியமானது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில் "நாங்கள் பலவீனரும் நீங்கள் பலமுள்ளவர்களுமாயிருக்கையில், சந்தோஷப்படுகிறோம்; நீங்கள் நற்சீர்பொருந்தும்படிக்கு விண்ணப்பம்பண்ணுகிறோம்" என்று எழுதுகிறார் (2கொரி.13:9). கொரிந்திய சபையார் நற்சீர்பொருந்த வேண்டும் என்பதுவே பவுலுடைய வேண்டுதலாயிருந்தது. உலக சம்பத்துக்கள் ஒரு மனிதனுடைய வாழ்வில் நிம்மதியைக் கொடுக்காது. அது அவனை இரட்சிக்கவும் முடியாது.

கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆசீர்வாதத்தையும் அவன் பெற்றுக்கொள்ளும்போது நற்சீர்பெறமுடியும். மேலும் பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால், நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றார் (பிலி.1:3-6). நற்சீர்பொருந்தினவர்கள் சுவிசேஷத்திற்கு பங்காளிகள். அப்படிப்பட்டவர்கள் மூலமாக கிறிஸ்துவின் சுவிசேஷப்பணி செயல்படுகிறது. நற்சீர்பொருந்தினவர்கள் கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாயிருக்கிறார்கள். நற்கிரியைகளை செய்யும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். இவர்களிலே கிறிஸ்துவுக்கேற்ற சிந்தையை நாம் காணமுடியும். இப்படிப்பட்ட நிறைவை கொலோசெய கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் கண்டார். ஆகையால் அவர்களுக்கு எழுதும்போது; "சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" என்கிறார் (கொலோ.2:10).

இந்த பரிபூரணம் என்ற வார்த்தை நற்சீர்பொருந்தியவர்களுக்கே பொருந்தும். அவர்களே பரிபூரணம் அடைந்தவர்கள். இவர்களிலே வேற்றுமையான உபதேசங்களைக் காணமுடியாது, பிரிவினைகளைக் காணமுடியாது, ஒரே சிந்தையுடையவர்களாயும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்ட சபையாரை வேதாகமம் புதிய ஏற்பாட்டில் அடையாளம் காட்டுகிறது. அவர்களே முதல் நூற்றாண்டு சபையார். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாயிருந்தனர். அவர்கள் கிறிஸ்துவின் சபையார் என அழைக்கப்பட்டனர். எருசலேமிலே இந்த சபையானது முதல் முதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆராதனையில் ஐந்து காரியங்களை ஒழுங்கும் கிரமுமாய் செய்து வந்தார்கள். சபை வளர்ச்சியடைந்த நாட்களில் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இயேசுவின் கடைசி கட்டளையை தங்கள் தோள்களில் ஏற்றுக்கொண்டு உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கும்பணியில் ஈடுபட்டனர். இவ்விதமான சிந்தையுள்ள ஒவ்வொருவரும் பூரணப்பட்டவர்களாயும், நற்சீர்பொருந்தினவர்களாயும் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு பவுல் கொடுக்கும் மற்றுமொரு ஆலோசனை என்னவென்றால்; "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" என்கிறார் (கொலோ.2:6,7). அநேக சபைகள் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தை நாளடைவில் விட்டுவிட்டு வேற்றுமையான உபதேசங்களைக் கைக்கொள்ளவும், போதிக்கவும் ஆரம்பித்துவிடுகின்றன தங்களுக்கு ஏற்றபோதகர்களை சபையார் தெரிந்துகொள்ளவும், தங்களுடைய விருப்பத்தின்படி நடக்கவும் முற்படுகின்றனர். பவுல் சொல்வதைப்போல அவருக்குள் வேர்கொள்ளவேண்டும். இயேசு நானே மெய்யான திராட்சச்செடி என்கிறார். ஆனபடியால் அவருக்குள் நாம் வேர்கொள்ளவேண்டும். அவரில் நிலைத்திராத கொடி கனிகொடுக்கவும் முடியாது, அது நிலைத்திருக்கவும் முடியாது. அதைப்போல நம்முடைய அஸ்திபாரம் கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டதாக இருக்கவேண்டும். பிதாவாகிய தேவன் மூலைக்கல்லாக இயேசுவை வைத்துள்ளார். இவர்மீது கட்டப்படும் கட்டிடம் நிலைத்திருக்கும். மனிதர்கள் மீது நம்பிக்கை வைத்து கட்டப்படும் கட்டிடங்கள் அவர்களுக்கு பின்பு அழிந்துபோம்.

ஆண்டவர் இயேசுவோ அழிவில்லாதவர். ஆகையால் உங்களுடைய அஸ்திபாரத்தை கிறிஸ்துவின் மீது வைத்து உங்களுடைய ஆவிக்குரிய சபையை உருவாக்குங்கள். மேலும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுங்கள். ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுங்கள் என்றால்; எப்பொழுதும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று சொல்லிக்கொண்டிருப்பதல்ல. அநேகர் இதை தவறாக புரிந்துகொண்டு செயல்படுகின்றனர். ஆண்டவருக்கு அவர் செய்த நன்மைகளுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒரு மனிதன் உங்களுக்கு ஒரு நன்மையை செய்துவிட்டால் அவனுக்கு நன்றி சொல்லுகிறதைப்போல ஸ்தோத்திரம் செலுத்துங்கள். அந்த மனிதனைப் பார்க்கும் பொழுதெல்லாம் நன்றி நன்றி என்று சொல்வீர்களானால் அடுத்த முறை

உங்களைப் பார்க்கும்போது அவன் ஓடிவிடுவான். நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வளரும்போது நம்மை நற்சீர்பொருந்தினவர்களாக்கும்.

நற்சீர்பொருந்தினவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருப்பார்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில்; "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்..." என்று எழுதுகிறார் (2தீமோ.3:14). அநேகர் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவைகளில் நிலைத்திருக்க தவறிவிடுகிறார்கள். இது எப்படியிருக்கிறது என்றால்; வீடுகட்டி அதில் குடியில்லாமற்போகும் ஜனங்களைப்போல இருக்கிறார்கள். வேதாகமம் நிலையான ராஜ்யத்திற்கு நேரே நம்மை வழிநடத்திக்கொண்டு செல்கின்றது. இதை நாம் விசுவாசத்தினாலே பெற்றுக்கொள்ளுகிறோம். நித்திய நித்தியமாக அவரோடு வாழ்வோம் என்ற நம்பிக்கையோடே செயல்படுகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திருந்து, மற்றவர்களுக்கு சாட்சியுள்ள மகனாக, மகளாக வாழவேண்டும். நாம் ஒரு காரித்தை சரியாக செய்யாமல் மற்றவர்களைப் பார்த்து அதைசெய்யும்படியாக அவர்களை உற்சாகப்படுத்துவது கூடாதகாரியம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இயேசுவானவர் நமக்கு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். அதில் நிலைத்திருக்கும்போது நாம் பூரணப்பட்டவர் களாக இருப்போம்.

"இயேசுகிறிஸ்துவைக்கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படியே செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பெருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்." (எபி.13:21). நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளாக மறுபடியும் சிருஷ்டிக்கப்படுகிறோம். எதற்கு என்றால் தேவனுக்கு முன்பாக அவருடைய சித்தத்தின்படியே நற்கிரியைகளை செய்யும் படியாக சிருஷ்டிக்கப்படுகிறோம். இயேசுவானவர் எங்கும் எப்பொழுதும் நன்மைசெய்கிறவராய் சுற்றிதிரிந்ததைப்போல நாமும் நற்கிரியைகளை கிறிஸ்துஇயேசுவுக்குள் செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" வேறே சிந்தையாயிருந்தால் அதை தேவன் உங்களுக்கு உணர்த்துவார்.

நீங்கள் கிறிஸ்துவில் நிலைத்திருப்பீர்கள் என்றால் அவருடைய மரணத்தை நினைவு கூருகிற ஒருவராயிருப்பீர்கள். "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" என்றார் (யோவா.6:56). நீங்கள் கிறிஸ்து இயேசுவில் நிலைத்திருப்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது. அவரில் நிலைத்திராதவன் அவருடைய மரணத்தை வாரந்தோறும் நினைவுகூரமாட்டான். அப்படிப்பட்டவன் கர்த்தரில் நிலைத்திருக்கவில்லை என்று காண்கிறோம்.

"கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்" (2கொரி.13:11). அநேகர் தேவன் தங்களோடே இருக்கவேண்டுமென நினைக்கிறார்கள். ஆனால் வேதவாக்கியத்தின்படியாக தங்களை

மாற்றியமைத்துக்கொள்ள யோசிக்கிறார்கள். மேற்கண்ட காரியங்கள் நம்மில் காணப்படுமேயானால் சமாதானத்தின் தேவன் நம்மோடிருப்பார். ஈசாக்கை அறிவீர்கள் அவனுடைய விரோதிகள் அவனைப் பார்த்து; "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம். ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம்பண்ணினோம்" என்றார்கள் (ஆதி.26:28). தேவன் ஈசாக்கோடு இருந்தார். அவன் கர்த்தருக்குப் பிரியமானதை அந்த தேசத்தில் செய்தான். எந்த மனிதரோடும் வீணாக போராடவில்லை. ஆசீர்வதிக்கும் கர்த்தருக்கும், கர்த்தருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படிந்தவனாக வாழ்ந்தான். கர்த்தர் அவனை விட்டுவிலகாமல் அவனை ஆசீர்வதித்துக் கொண்டுவந்தார். அதைப்போல எசேக்கியா என்ற ஒரு ராஜாவை நீங்கள் அறிவீர்கள்; "கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடமெங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று; அவன் அசீரியா ராஜாவைச் சேவிக்காமல், அவன் அதிகாரத்தை தள்ளிவிட்டான்" (2இரா.18:7).

சிலர் ராஜாக்களுக்காக பயந்து தேவனுடைய கட்டளைகளை புறம்பாக்கிவிடுவார்கள். ஆனால் எசேக்கியாவோ தன் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கவும் தாவீதின் தேவனுடைய உடன்படிக்கைகளைக் கைக்கொள்ளவும் விக்கிரகங்களை தன்னுடைய ராஜ்யபாரமெங்கும் அகற்றவும் நடவடிக்கை எடுத்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடமெங்கும் அவனுடைய காரியங்களை வாய்க்கச்செய்தார். இவ்விதமாக நாமும் ஆசீர்வாதத்தோடே ஜீவிக்கவேண்டுமென ஆசைப்படுகிறோம். ஆனால் தேவன் நம்மோடிருக்கவில்லையென்றால் நாம் செய்யவேண்டியது என்ன? ஈசாக்கை பாருங்கள், எசேக்கியாவைப்பாருங்கள் அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையை எப்படிக் கைக்கொண்டார்கள். அந்தப்படியாக நீங்களும் கைக்கொள்ளுவீர் களானால் சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷமாகவும், நற்சீர்பொருந்தியவர்களாகவும், ஆறுதலடைந்தவர்களாகவும், ஏகசிந்தையுள்ளவர்களாகவும், சமாதானமுள்ளவர் களாகவும் இருப்பீர்களானால் சமாதானத்தின் தேவன் உங்களோடு கண்டிப்பாக இருப்பார். உங்களுடைய காரியங்களையும் வாய்க்கச்செய்வார்.

**நற்சீர்பொருந்தியவர்களிடம் காணப்படும் இரகசியம் என்ன?**

இயேசு சொல்கிறார்; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்கிறார் (யோவா.14:23). நற்சீர்பொருந்தியவர்கள் இயேசுவினிடத்தில் அன்பாக இருக்கிறார்கள். அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறார்கள். ஆகையால் அவர்களிடத்தில் பிதா அன்பாயிருக்கிறார். ஆனபடியால் தேவன், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் இம்மூவரும் அப்படிப் பட்டவர்களில் தங்கியிருந்து அவர்களோடு வாசம்பண்ணுவார்கள். அவர்களுடைய வாழ்க்கை செழுமையாக இருக்கிறது. அவர்கள் நற்சீர்பொருந்தியவர்களாக காணப்படுகிறார்கள். நீங்களும் இவ்விதமாக இருக்க இயேசுவில் அன்பாயிருந்து அவருடைய வசனத்தை கைக்கொள்ளுங்கள். தேவன் தாமே உங்கள் யாவரையும் நற்சீர்பொருந்தினவர்களாக நிலைநிறுத்துவாராக!



# வாசல்களைத் திறவுங்கள்

## Open Doors

J.C.Choate

சபையின் பணி சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே **நம்முடைய** பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக்கிறோம்..... செய்யவேண்டிய அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும்படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு, தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை **உருவாக்கலாம்**. அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு **முயற்சிசெய்வதன்** மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும், ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் **எதிர்பார்க்கமாட்டீர்கள்** - மேலும் வழக்கமாக நீங்கள் எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள்

அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப் பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம்

அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமான காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்தமட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி **தேவன் வாசல்களைத்திறந்தார்**, நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும் நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர்களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று

கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகக் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது.

நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட ஒருமித்துப்போக அல்ல, (தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப் படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம்,

இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, “....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்”(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், “....இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்”(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், “..... அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்” (லூக்.10:2) என்றார்.இயேசு, “கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும்

பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேவனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து; நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமையுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும்படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து "இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்" எனக் கூறுவோமாக.

**நடப்புச் செய்திகள்**

- ரஷ்யாவில் 13வது மாடியிலிருந்து கீழே விழுந்த 22 வயதுள்ள இளம்பெண் உயிர்பிழைத்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது
- நம் நாட்டில் 120 கோடி செல்போன்கள் பயன்பாட்டில் உள்ளதாக மத்திய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- வாய் வழியே பிறக்கும் உயிரினம் தவளை தான். தன்னுடைய வாயில் வைத்து முட்டைகளை அடைகாக்கிறது. பொரிக்கும் தருணத்தில் தண்ணீருக்கு மேலே வாய் வழியாக முட்டைகளை வெளியேற்றுகிறது.

நன்றி - NewsPoint

**ஜெபியுங்கள்**



- சென்ற மாதம் 24 மணிநேர சேனல் துவங்க உதவிய தேவனுக்கு நன்றி சொல்லி...
- வேர்ல்டு இவான்சலிசம் வேதாகம பள்ளி மாணவ மாணவியர்களுக்காக...
- நமது மாதஇதழின் வாசகர்களுக்காக...

ப.ஏ

**வேதாகம கதாபாத்திரங்கள்**
**Bible Characters**

**49**



## பரிசுத்த வேதாகமத்தில் எசேக்கியேல்
## Ezekiel In The Holy Bible

1. பூசியென்னும் ஆசாரியனுடைய குமாரன் - எசே.1:3
2. எசேக்கியேல் என்றால் தேவனுடைய பலம்
3. இவனுடைய புத்தகத்தில் முதல் 24 அதிகாரம் எருசலேமின் அழிவுக்கு முன் நடைபெற்றவை பின்பு உள்ள அதிகாரங்கள் எருசலேமின் அழிவுக்குப் பின் நடந்தவை
4. பாவம் செய்கிற ஆத்துமா சாகும் - எசே.18:20
5. சாகிறவனுடைய சாவை கர்த்தர் விரும்பவில்லை - எசே.18:32
6. நீதிமான் தன் நீதியைவிட்டு பாவம் செய்தால் சாவான் - எசே.33:18
7. என் ஆடுகளை நான் மேய்த்து (நானே நல்லமேய்ப்பன்) - எசே.34:15
8. பிரேதக்குழிகளைத் திறந்து உங்களை - எசே.37:13
9. ஒரே ராஜா இருப்பார் - எசே.37:22
10. பாபிலோன் நாட்டில் கொல்லப்பட்டதாகவும், இவனுடைய கல்லறை இன்றும் இருக்கிறது.

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்கு என்னவாயிரு என்றார்?**

**விடை:** காவலாளனாயிரு
எசேக்கியேல் 38:7.



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

50



## பரிசுத்த வேதாகமத்தில் யூதா
## Judah In The Holy Bible

1. யாக்கோபின் சகோதரன் - யூதா 1
2. ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக - யூதா 3
3. விசுவாசியாதவர்களை - யூதா 4
4. ஆதிமேன்மையைக் காத்துக்கொள் - யூதா 6
5. திருஷ்டாந்தம் சோதோம் - யூதா 7
6. தூஷணவார்த்தை - யூதா 9
7. பிலேயாம் வழி - யூதா 11
8. காரிருள் வைக்கப்பட்டுள்ளது - யூதா 13
9. ஏனோக்கு - யூதா 14
10. கடைசிகாலத்தில் - யூதா 18

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***இவன் ஒரு அப்போஸ்தலனா?***

**விடை:** ஆம் - "யாக்கோபின் சகோதரனாகிய யூதா"... (லூக்கா 6:16)







தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் புதிய துவக்கம்
24 மணி நேரமும் கர்த்தருடைய செய்திகளை
உங்கள் மொபைல் போன் வழியாக காணலாம்.
Twoc Tv app டவுன்லோடு செய்து காண்க
கிடைக்காதவர்கள் எங்களோடு
தொடர்பு கொள்ளுங்கள்
லிங் அனுப்பிவைக்கிறோம்.
6379350509







நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் – மாற்கு 16:16

பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

Jesus Christ the Eternal Sacrifice

## The Choice of Families
## குடும்பங்களின் மேன்மை

-Betty



நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்துகொண்டிருக்கிறோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்துகொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிற்கான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது: "…..ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே…… அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே… இப்படியிருக்க…..நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்".

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்" (யோவா.1:12,13).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே…நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே….. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.3:26,27;4:6,7).

## கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17). யோவான்1:1-4ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேரானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; .....ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், **அவர்** ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது**" (எபி.2:11,14,15,17).

"......**கிறிஸ்துவோ** அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி.3:6-14). கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு1:3,4).

"**நீங்கள்** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், **தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்...**" (எபே.3:19). தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ".....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்" (ரோம.8:29).

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" (1கொரி.6:15,17). எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, **கிறிஸ்து இயேசு மனுஷனாக** தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்து, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்காளக மாறியிருக்கிறோம்".

***"முடிந்தது" என்று இயேசு கூப்பிட்டபோது***

***When Jesus Cried out "It is finished"***

*"முடிந்தது" என்று இயேசு கூப்பிட்டபோது*
*நீதி பூரணப்படுத்தப்பட்டது,*
*தெய்வீக நீதி திருப்தியடைந்தது,*
*இரத்தம் சிந்தப்பட்டது,*
*மீட்பு செலுத்தப்பட்டது*
*பாவங்கள் மன்னிக்கப்பட்டது*
*ஒப்புரவு ஏற்படுத்தப்பட்டது (அடையப்பட்டது)*
*மரணம் வெற்றி பெற்றது மற்றும்*
*இரட்சிப்பு உறுதி செய்யப்பட்டது.*

*When Jesus Cried out "It is finished"*
*Righteousness was perfected*
*divine justice was satisfied*
*blood was shed*
*redemption was paid*
*sins were forgiven*
*reconciliation was achieved,*
*death was conquered and*
*salvation was secured*

## வேத அறிவுப்போட்டி எண் 286 ன் விடைகள்

1. யோனா - யோனா 3:2
2. பேதுரு - கலா.2:8
3. ஞானமுள்ளவன் - மீகா 6:9
4. பவுல் - எபே.3:8
5. அக்கினியைப்போல, கன்மலை - நாகூ.6
6. பவுல் - பிலி.4:1
7. ஆபகூக் - ஆபகூ.3:14
8. பவுல் - கொலோ.4:14
9. செப்பனியா - செப்.2:9
10. பவுல் - 1தெச.1:3,4

## வேத அறிவுப்போட்டி எண் 286 ல் வெற்றிபெற்றவர்கள்

1.Mrs.ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
2.Mrs.ஜாய்மேத்யு - வி.கே.புரம்
3.S.செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
4.A.ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
5.S.ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
6.K.ராணிமூர்த்தி - ஏர்வாடி
7.D.அன்புக்கமலம் - கோவை
8.S.சாந்தக்குமாரி - நாசரேத்
9.Mrs.பியூலா ஜேசுரத்தினம் - பாண்டிசேரி
10.Mrs.ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
11.Mrs.பாலின் மார்ட்டின் - சிவகங்கை
12.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
13.P.சந்திரா டேனியேல் - நஞ்சான்குளம்
14.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
15.R.கஸ்தூரி - தூத்துக்குடி
16.J.செல்வராஜ் - தூத்துக்குடி
17.E.அதிசயம் - பனைகுடி
18.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
19.K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
20.Mrs. அன்னாள் ஜெபக்கனி - கோவை
21.Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
22.J.S.ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
23.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
24.Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
25.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
26.R.ஞானசிரோன்மணி - மதுரை
27.Mrs.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
28.Mrs.ஜெயாபாணிஜெபராஜ் - தாம்பரம்
29.Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி
30.Mrs.பாலின் டேனியல் - கீழ்ப்பாக்கம்
31.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் - சென்னை
32.D.விஜயகாந்தி - வேலூர்
33.J.பிச்சை - விருதுநகர்
34.J.ஜான்சி - ஆனைமலை
35. Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
36. Mrs.வசந்தா குமாரி- வத்தலக்குண்டு

## வேத அறிவுப்போட்டி எண் 287 ன் விடைகள்

1. ஆகாய் - ஆகாய் 1:8
2. பவுல் - 2தெச.2:5
3. தூதன் - சகரி.2:2
4. தேவன் - 1தீமோ.6:16
5. ஏதோமியர் - மல்.1:4
6. தீமோத்தேயு - 2தீமோ.3:15
7.ஏதோம் - ஆதி.25:30
8. தீத்து - தீத்து 1:1
9. மோசே, யோசுவா - யாத்.33:11
10. ஆம் - பிலே.12

## வேத அறிவுப்போட்டி எண் 287 ல் வெற்றிபெற்றவர்கள்

1. Mrs.லலிதாபெவின்சன் - சிவகங்கை
2.D.அன்புகமலம் - காரைக்குடி
3.S.செல்வராஜ் - திருநெல்வேலி
4.K.ராணிமூர்த்தி - ஏர்வாடி
5.Mrs.பாலின்மார்ட்டின் - சிவகங்கை
6.Mrs.ரூபவல்யா - தூத்துக்குடி
7.S.சாந்தகுமாரி - நாசரேத்
8.Mrs.ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
9.Mrs.கிறிஸ்டோபல் - கோவை
10.P.சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
11.A.டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
12.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
13.R.ஞானசிரோன்மணி - மதுரை
14.Mrs. பியூலாஜேசுரத்தினம் - பாண்டிச்சேரி
15.Mrs.ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
16.Mrs.ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
17.K.S.மாணிக்கவாசகம் - திருச்சி
18.Mrs.ஃபுளோரன்ஸ்சீத்தர் - சென்னை
19.E.அதிசயம் - பனைகுடி
20.Mrs.ஃபிராங்களினாஜான் - ஊட்டி
21.A.அன்னாள் ஜெபக்கனி - கோவை
22.S.அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
23.Mrs.தேவிராஜசிங் - திருப்பூர்
24.Mrs.பாலின்டேனியல் - சென்னை
25.D.ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
26.Mrs.சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
27.Mrs.விக்டர்பாபு - ஈரோடு
28.S.ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
29.Mrs.ஜெயாபானிஜெபராஜ் - தாம்பரம்
30.M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
31.R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
32.Mrs.தங்கபுஸ்பம் - நாசரேத்
33.J.செல்வராஜ் - தூத்துக்குடி
34.Mrs.ஜான்சி - ஆனைமலை
35.Mrs.வசந்தா குமாரி- வத்தலக்குண்டு
36.E.ஜாய் ஹெலன் புனிதா - தாம்பரம்
37.R.அந்தோணியம்மாள்- கலுங்குவிளை

## வாசகர் கடிதம்... ஆசிரியர் கடந்து வந்த பாதையைப் பற்றி...

*கர்த்தர் ஊழியத்திற்கு அழைக்கும்போது அந்த நல்ல வாய்ப்பை இழந்து போனால் நட்டம் கர்த்தருக்கு அல்ல! வாய்ப்பை இழந்த நபருக்குத்தான் நட்டம். மோசே அப்படியான வாய்ப்பை தவறவிட சாக்குபோக்கு சொன்னாலும் முடிவாக கர்த்தருடைய ஊழியத்திற்கு உடன்பட்டார்* ***(யாத்.410).*** *உழியத்திற்கு அழைக்கப்பட்ட நபர் மறுத்தாலும் வேறு ஒரு நபரைக் கொண்டு அந்த காரியத்தை கர்த்தர் நிறைவேற்றுவார்* ***(எஸ்தர் 4:14).*** *உலகப்பிரகாரமாக அநேக காரியங்களை குறித்து வாலிபப்பிரயாத்தில் கவலைப்பட்ட காலகட்டத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படியான பயிற்சியை பெற்று திரு ஆசிரியர் உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னை விட்டுடெடுபடாத நல்ல பங்காக ஊழியத்தை தெரிந்து கொண்டார். கண்ணீரோடே விதைத்த திரு ஆசிரியர் கெம்பீரத்தோடே ஆத்தும அறுவடைசெய்கிறார். அநேக தரிசு நிலைங்களை* ***(இயேசுவை அறியாதவர்கள் மத்தியில்)*** *பயண்படுத்தி அதை விளை நிலமாக திருத்தி நீதிக்கென்று* ***"தேவ செய்தி", "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்"*** *மாத இதழ் மூலமாக விதை விதைத்து நல்ல மகசூலாக அறுவடை செய்து தன் களஞ்சியத்தில் சேர்க்கிறார். இப்படி ஆசிரியர் சேர்த்த ஆத்துமாக்ளில் நானும் ஒருவன். விதை விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்* ***(மாற்.4:14).*** *இந்த வசனத்தை முன்னிலைப்படுத்தி தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் இதழின் முக்கிய சின்னமாக பதிவு செய்துள்ளார்.* ***(ஒருவர் விதை விதைப்பதுபோல் உள்ள படம்).***

*உற்றார் உறவினர் கோபத்தால் புறக்கணிக்கப்பட்டு காணமல் போனது என் முகவரி உற்ற நேரத்தில் உதவி கரம் நீட்டி தேவ அன்பு காட்டி அரவனைத்தது மகிமைக்குரிய* ***கல்வாரி!***

*ஆசிரியர் அவர்களுக்கு நன்றி கூறி எழுதும்படியான கிருபை செய்த இயேசுவுக்கு நன்றி.*

*அன்புடன்,*

**K.S.**மாணிக்கவாசகம், திருச்சி

**இவ்விதழில் வெளிவந்துள்ள ஒவ்வொரு செய்தியிலிருந்தும் ஒவ்வொரு கேள்வி கேட்கப்பட்டுள்ளன. சரியான விடை எழுதி அனுப்பும் ஒவ்வொரு வாசகருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.**

**இம்மாத இதழ் வேத அறிவுப்போட்டி**
**TWOC NO.2 செப்டம்பர் 2024**

**வாசகருக்கான நற்செய்தி**

1. ஆசிரியருரையில் எந்த ராஜா அசீரிய ராஜாவை சேவிக்காமல் தள்ளிவிட்டான்?
2. எவருடைய செய்தியில் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? என எழுதியிருக்கிறார்.
3. சாகிறவனுடைய சாவை கர்த்தர் விரும்பவில்லை எந்தபுஸ்தகம்?
4. பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க எவரும் அவர்களைப்போல... உடையவரானார்?
5. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ எவர்களை உடையவன்?
6. விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தியவர்கள் யார்?
7. யூதா யாக்கோபின் சகோதரனா?

இப்போட்டியில் கலந்து கொள்ளுகிறவர்கள் உங்களுடைய **Ref.No,** உங்களுடைய முழு முகவரி மற்றும் உங்கள் மொபைல் எண்ணுடன் எழுதி இம் மாதம் 25 -ம் தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும்.

உங்களுக்கான பரிசுகளை பதிவு தபால் மூலம் இம்மாத இறுதியில் அனுப்பிவைப்போம். நீங்கள் போஸ்ட் மேனிடம் நேரடியாக கையொப்பம் இட்டு பெற்றுக்கொள்ளலாம். தேவன் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

**குறிப்பு:** முன்னமே தொடர்ந்து அறிவுப்போட்டியில் கலந்துகொள்ளுகிறவர்கள் இதிலும் கலந்து கொள்ளலாம் ஆனால் தனி தபால் மூலம் பதில் எழுதி அனுப்பவேண்டும். நன்றி.

*சென்ற மாத இதழின் கேள்விகளுக்கு சரியான பதில் எழுதி பரிசுபெறுகிறவர்கள் மொத்தம் 16 பேர். வாழ்த்துக்கள்!*

பெண்கள் பகுதி

# நீங்கள் பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்

## You Become Edibile for Milk

*J.GloryArjunan*



இச்செய்தியை வாசிக்கிற சகோதரிகள் யாவருக்கும் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காலங்கள் கடந்தோடுகின்றன. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் சமீபமாயிருக்கின்றது. "..மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார் (இயேசு) ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும்" (வெளி.22:20) என்றான் யோவான். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும என்று நம்மால் கூறமுடியுமா? நம்மில் எத்தனை பேர் இயேசவை சந்திக்க ஆயத்தமாக இருக்கிறோம்? சிந்திப்போம்! ஆனால் பல ஆண்டுகாலமாக நாங்கள் கிறிஸ்தவர்களாகத் தான் இருக்கிறோம், ஆவிக்குரிய சபைக்குத் தவறாமல் செல்கிறோம் என்று நீங்கள் சொல்லலாம். நல்லது!

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களைப் பார்த்தும் எபிரெய கிறிஸ்தவர்களைப் பார்த்தும் உங்களுக்கு பாலைக் கொடுத்தேன் என்றும், நீங்கள் பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள் என்றும் கூறுவதை இப்புத்தகங்களில் வாசிக்க முடிகிறது அப்படியானால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்குள்ளும் பாலை உண்ணத்தக்கவர்கள் இருக்கிறார்கள் என்று தானே அர்த்தம். ஆம், ஒருவேளை நாம் கேள்வியில் ‘மந்தமுள்ளவர்களாக’ (எபி.5:11) இருப்போமானால், அதாவது கர்த்தருடைய வசனங்களைக் கேட்டும், அதைக் குறித்த சரியான புரிதல் இல்லாமல் மந்தமாக இருந்து கொண்டு, நான் கிறிஸ்தவள் தான், ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறேன் உபவாசிக்கிறேன், வேதம் வாசிக்கிறேன், வாரந்தவறாமல் சபைக்குச் செல்லுகிறேன், எல்லாவற்றிற்கும் மேலாக வாரத்தின் முதல் நாள் தோறும் இயேசுவின் மரணத்தை நினைவு கூர்ந்து அப்பத்திலும், திராட்ச ரசத்திலும் பங்கு பெறுகிறேன் என்று சொல்லி, திருப்தியடைந்தவர்களாக இருந்து கொண்டு, கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொள்ளாமல் போவோமென்றால் நாம் வஞ்சிக்கப்பட நேரிடும். ஏனெனில் ஆண்டவர் இயேசு அநேக இடங்களில் தம்முடைய வார்த்தையைக் கேட்டு, அதின் படி செய்யவேண்டும் என்று வலியுறுத்துவதைக் காண்கிறோம். எனவே வேத வசனத்தின்படி கிரியை நடப்பிக்காத யாவருமே பாலை உண்ணத்தக்கவர்களாகவே இருப்பார்கள். பாலை உண்ணத்தக்கவர்கள் யார்? கிறிஸ்துவுக்குள் குழந்தையாயிருப்பவர்கள், கேள்வியில் மந்தமுள்ளவர்கள் 1கொரிந்தியர் 3:1. "மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று" என்று பவுல் கூறுகிறான். மாம்சத்துக்குரியவர்கள் எப்படியிருப்பார்கள்? மனுஷமார்க்கமாய் நடப்பார்கள், அவர்களுக்குள்ளே பொறாமையும், வாக்குவாதமும் பேதங்களும் (Divisions) இருக்கும் (1கொரி.3:3). இப்பேர் பட்டவர்கள் தேவனை அறிகிற அறிவையும், கிறிஸ்துவை அறிகிற அறிவையும், கிறிஸ்துவை அறிகிற அறிவையும் பெறதாவர்களாக கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிருப்பார்கள். தேவனையும், கிறிஸ்துவையும் அறியாதவர்கள் எப்படி தேவனையும், கிறிஸ்துவையும் விசுவாசித்து கிரியை நடப்பிக்க முடியும்? மேலும் பவுல் கூறுகையில் "நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல் பாலைக் குடிக்கக் கொடுத்தேன். இன்னும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால் இப்போதும் உங்களுக்குப் பெலனில்லை" (1கொரி.3:2) என்கிறான்.

தொடர்ந்து, பவுல் எபிரெய கிறிஸ்தவர்களைப் பார்த்துக் கூறுகையில் "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்க மில்லாதவனாயிருக்கிறான்" (எபி.5:12-13) என்கிறான். இவ்வசனத்தில் நான்கு காரியங்களைக் குறித்து பேசுகிறான்.

**காலத்தைப் பார்த்தால் போதகராயிருக்க வேண்டியவர்கள்:** அநேக ஸ்திரீகள் தங்கள் வாலிபத்தில் கல்லூரி வாழ்கையைல் கிறிஸ்வை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை தாங்கள் உண்டு, தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் உண்டு என்று சொல்லி, பெற்ற இரட்சிப்பின் சந்தோஷத்தை மற்ற சகோதரிகளுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் அறிவித்து தாலந்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணாமல் ஒரு தாலந்தைப் பெற்று புதைத்துவைத்தவனைப் போல சுயநலமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். போதிக்க வேண்டியவர்களாகிய இவர்களுக்கு மறுபடியும் மூல உபதேசத்தை உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆதி முதற்கொண்டு கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளைகளையும் கற்பனைகளையும் கொடுத்து வழிநடத்திக் கொண்டு வந்து இன்றுமட்டும் தம்முடைய கட்டளைகளை உபதேசங்களாகக் கொடுத்து வழிநடத்தி வருகிறார். கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லிய மூல உபதேசங்களை (எபி.6:1) கருத்தாய் வாசித்து, மறுபடியும் பகுத்துக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மேலும் இப்பேர்பட்டவர்கள் பலமான ஆகாரத்தைப் புசிக்க மாட்டாதவர்கள், தங்களுக்கு ஒரு சோதனை, வேதனை, உபத்திரவம் வரும் காலத்தில் உறுதியாக நிற்கமாட்டாதவர்கள். எத்தனையோ கிறிஸ்தவ சபைகள் தங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தினிமித்தமும் தாங்கள் எதிர்பார்த்த ஊழியம் கிடைக்காமல் சபையின் பெயரைக் கூட மாற்றிக் கொண்டவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்துவினிமித்தம் வரும் துன்பங்களை அநேக விஷயங்களில் சகிக்காமல் மறுதலிக்கிறவர்களே பலமான ஆகாரத்தைப் புசிக்காமல் பாலை உண்ணத்தக்கவர்களாக இருக்கின்றனர். தங்களுடைய கிறிஸ்தவ ஜீவியம் சுமூகமாகச் செல்லவேண்டும், சகல ஆசீர்வாதத்துடன் செல்லவேண்டும் என நினைக்கும் ஸ்திரீகள் நிச்சயமாக குழந்தைகளைப்போலத் தான் இருப்பார்கள். இடுக்கமான வாசல் வழியாக செல்வது அவர்களுக்குப் பிடிக்காது. அப்படிச் செல்வது சாபம் என்று கூட எண்ணுகிற கிறிஸ்த சகோதரிகள் உண்டு. இப்படியாக பாலுண்கிறவர்கள் நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறான். இதைத் தான் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில் 'கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் எனக் குறிப்பிடுகிறான்.

அன்பான சகோதரியே நாம் எப்படியிருக்கிறோம்? கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாயிராமல், கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவில் தேறினவர்களாக இருக்க வேண்டும். ஏதோ, தேவன் ஒருவர் உண்டு, பாவத்திலிருந்து இரட்சிக்கக் கூடிய இரட்சகராகிய கிறிஸ்து ஒருவர் உண்டு, நமக்காகப் பரிந்து பேசக்கூடிய ஆவியானவரும் கொடுக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லி, அப்படியே இருந்து விடுவோமானால் வேத வாக்கியங்களின் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளாத காதை உடையவர்காள, கேள்வியில் மந்தமுடையவர்களாக இருந்து காலத்தைக் கழித்துப் போட வேண்டியிருக்கும். நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்களாக, நாம் கற்றுக் கொண்டதே சரி என சாதிக்காதபடி வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்போம்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவா.6:39) என்று இயேசு சொல்லும் சத்தத்திற்குக் கீழ்ப்படிவோம். ஏனென்றால் நீதியின் வசனத்தை வாசித்து, அதை நம் அப்பியாசப்படுத்தும்போது, அவ்வசனங்களில் பழக்கமுடையவர்களாக மாறி பலமுள்ள ஆகாரத்தை உண்ணக்கூடியவர்களாக மாற்றப்படுவோம்.

மேலும், பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடைவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்" (எபி.5:14) என்று வாசிக்கிறோம். "சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும் வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேது.2:2-3). இவ்வசனத்தில் சொல்லப்பட்டுள்ளபடி, மேற்கூறிய காரிங்களை நம்மை விட்டு ஒழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்மிடத்தில் இக்காரியங்கள் இருக்குமானால் இவைகளை ஒழித்துவிட்டு திருவசனமாகிய ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருந்து கற்றுக்கொள்ளுவோம்.

அப்படிச் செய்யும்போது பலமான ஆகாரத்தை உண்ணுபவர்களைப்போல நன்மை தீமையின்னதென்று பகுத்தறியக் கூடிய ஞானத்தைப் பெற்று, அதை நம் வாழ்வில் பயிற்சி செய்து பூரண வயதுள்ளவர்கள் போல, அதாவது கிறிஸ்துவைப் பற்றிய மூல உபதேசங்களில் தேறினவர்களாகக் காணப்படுவோம். நாம் கிறிஸ்துவினிடத்தில் வந்தபோது, ஆவிக்குரிய அத்தனைக் காரிங்களையும் அறிந்தவர்களாக இருந்திருக்க மாட்டோம். முதல் முறையாக கிறிஸ்துவினிடத்தில் வந்தபோது புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல இருந்திருப்போம். ஒரு குழந்தை பிறந்து, அது வளர்சியடையாமல் அப்படியே இருக்குமானால் அது நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்குமா? நிச்சயமாக இல்லை.

அதைப்போலவே நம்முடைய தேவனும் நம்மிடத்தில் ஆவிக்குரிய வளர்ச்சியை எதிர்பார்க்கிறார். தேவன் "இவர் என் நேசகுமாரன், இவருக்குச் செவி கொடுங்கள்" என்று தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்தார். எனவே கிறிஸ்துவைப் பற்றிய மூல உபதேசம் என்ன என்பதை அறிந்து கொள்ளும்படி வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்போம், கிறிஸ்தவர்களாகிய நாம் கற்றுக்கொண்டதுதான் சரியானதென சாதிக்காமல், நாம் பின்பற்ற வேண்டிய கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருப்போம். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறிநடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2யோவா.9) என்று வாசிக்கிறோம்.

அநேகர் இன்று வரை மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளில் நிலைத்திருக்கின்றனர் அல்லது பழைய உடன்படிக்கைகளையும் புதிய உடன்படிக்கையையும் (பிரமாணங்களை) கலந்து கைக்கொள்ளுகின்றனர். பழைய வஸ்திரத்தையும் புதிய வஸ்திரத்தையும் இணைத்தால் அது கிழிந்து போகும் என்று சொல்லப்பட்ட கிறிஸ்துவின் உபதேசத்திற்குச் செவிசாய்ப்போம். "...நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோம.3:19). அநேக ஸ்திரீகள் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள ஆசீர்வாத வசனங்களையே தமதாக்கிக்கொள்ள விரும்புகின்றனர்.

அன்பு சகோதரிகளே, மேற்குறிப்பிட்ட வசனங்களை அலட்சியப்படுத்தாதீர்கள். நான் கற்றுக் கொண்டது தான் சரி என்று சாதிக்காதீர்கள். நன்மை தீமையின்னதென்று பகுத்து ஆராய்ந்து பார்த்து அதைப் பயிற்சி செய்யும் தேறின கிறிஸ்தவ ஸ்திரீகளைப் போல மாறுங்கள். வேதாகமத்தை ஏதோ கடமைக்கென்று வாசிக்காமல், வசனங்கள் யார் கொடுத்தது, யாருக்குக் கொடுக்கப்பட்டது, எப்பொழுது கொடுக்கப்பட்டது என்று ஆராயுங்கள். கிறிஸ்துவின் மூல உபதேசத்தைக் கண்டு கொள்ளுங்கள், கடைபிடியுங்கள். கர்த்தர் தாமே வேதத்திலுள்ள அதிசயங்களைக் காணும்படி உங்கள் மனக்கண்களைத் திறப்பாராக! கிறிஸ்துவின் கிருபை நம்மோடுகூட இருப்பதாக! ஆமென்!.

சிறுவர் பகுதி

# விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20

சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.



முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்திய தாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம் ளுரனேயல ஊடயளள மற்றும் சபைக்குச் செல்லுவதை அசட்டைபண்ணக்கூடாது. உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

மனப்பாட வசனம்

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”-1பேதுரு5:8

## வேத அறிவுப் போட்டி எண்: 289

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவன் சிறுவயதாயிருக்கும்போது சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான்?
2. ஏழாம் தூதன் எக்காளம் ஊதும்போது; உலகத்தின் ராஜ்யங்கள் எவருக்கும் எவருக்குமுரிய ராஜ்யங்களாயின?
3. எந்த ராஜாவின் குமாரத்தி தாவீது கர்த்தருக்கு முன்பாகக் குதித்து நடனம்பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள்?
4. நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில் என்ன செய்ய வேண்டும்?
5. சாலமோன் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகி எந்த வருஷம், எந்த மாதத்தில் கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான்?
6. பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டிலே இயேசு போஜனபந்தியிருந்தாரா?
7. தன் புருஷனை நோக்கி: இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனுக்கு ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டுவோம் என்ற பெண் யார்?
8. உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்: இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து என்ன செய்யப்படும்?
9. எவர்கள் பஞ்சலோகக் கைத்தாளங்களைத் தொனிக்கப்பண்ணிப் பாடினார்கள்?
10. உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் என்றவன் யார்?

## வேதாகம ஆய்வு... 73

### தானியேல்
### Daniel



1. தானியேல் – நியாயத்தீர்ப்பு
2. இவனுடைய மறுபெயர் பெல்தெஷாத்சார் – தானி.1:7
3. ராஜபோஜனத்தினால் தீட்டுப்படுத்தாது காத்துக்கொண்டவன் – தானி.1:8
4. சிங்கங்களின் வாயைத் தேவன் தூதனை அனுப்பி கட்டிப்போட்டார் – தானி.6:23
5. பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2024-2026
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2024-2026
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2024





வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை டிரஸ்ட் -ல் பணியாற்றியவர்களை
வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் சார்பாக வாழ்த்தி கௌரவப்படுத்தும் நிகழ்ச்சி

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA



யோர்தான் நதி

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan